www.tamilarangam.net

வேற்றுமையை மறந்து, பகைமையைத் துறந்து, இலட்சிய அடிப்படையில் தமிழினம் ஓரணி திரளும் என்பதில் எமக்குச் சந்தேகமில்லை.

இப்போது இந்திய அரசின் முயற்சியினால் பேச்சுவார்த்தை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எமது மக்களின் மிக நெருக்கடியான கால கட்டங்களிலெல்லாம் நேசக்கரம் நீட்டி பாசத்தோடும் பரிவோடும் எம்மை அரவணைத்து ஆதரவளித்த இந்திய மக்களையும் இந்திய அரசையும் நாம் என்றும் புறக்கணிக்கமுடியாது.

நல்லெண்ணத்துடனும் விசுவாசத்துடனும் கூடிய இந்திய அரசின் முயற்சிகளுக்கு நாம் குறுக்கே நிற்க முடியாது

'குறுக்கே நிற்காதீர்கள்' என்றும் நாம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோம்:

எம்மைப் பொறுத்தவரையில், எமது மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்தக்கூடிய ஓர் அரசியல் தீர்வினை பௌத்த சிங்கள அரசோ – அதன் தலைவர்களோ அல்லது ஏனைய சிங்கள அரசியல்வாதிகளோ முன்வைப்பார்கள் என்று நாம் எதிர்பார்க்கவில்லை – நம்பவுமில்லை.

பேச்சு வார்த்தை நடக்கையில் மறு புறத்தில் தமிழர் படுகொலைகள் பாரிய அளவில் தொடர்வதே இதற்கு அத்தாட்சி!

'ஜன நாயகம்' எனப்படும் மக்கள் ஆட்சி முறையும் 'சோஷலிசம்' எனப்படும் சமநீதிச் சமூக அமைப்பும் பின்னிப்பிணைந்த தமிழீழமே எமக்குள்ள ஒரே வழி

இப்போதிருப்பதை விட எமது விடுதலைப்போரின் எதிர்காலம், மிகக் கடுமையானதாக. கொடுமையானதாக இருக்கப்போகின்றது.

எதிர்காலத்தை ஒற்றுமையுடனும், இலட்சிய உறுதியுடனும் நாம் எதிர்நோக்கியே ஆக வேண்டும்.

கான்ஸ்டபிள் சிவநேசன் கொலை வழக்கில், வெலிக்கடைச் சிறையில் நான்கு சுவர்களுக்குள்ளும், கழுத்தில் கயிறு மாட்டப்பட்டு சாகும் வரையில் நீங்கள் தூக்கிலிடப்படுவீர்கள் என தமக்கு மரண தண்டனை விதித்த மாண்புமிகு நீதிபதியை நோக்கி – நீதி மன்றத்தின் அமைதியைக்கிழிக்கும் ஆணித்தரமான குரலில் தமிழீழ சுதந்திர முழக்கமிட்ட குட்டி மணி – ஜெகன் இருவரின் விடுதலை ஆவேசம் எமக்கு வழி காட்டட்டும்

அன்று வெலிக்கடை சிறையில் வீழ்ந்த எங்கள் மாவீரர்களின் தியாகமும், வீரமும் எமது விடுதலைப் பணிக்கு ஒளியூட்டட்டும்

"சுதந்திரம் எமது பிறப்புரிமை"

அ. செல்வம்
செயலதிபர்,
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்




**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்**

**THAMIL EELAM LIBERATION ORGANIZATION**

யூலைத் திங்கள் 25-ம் நாள்.

## தியாகிகள் தினத்தில்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் மக்களே!

ஜூலை மாதம் 25-ம் நாள். எமது இனத்தின் நினைவிலிருந்து பிரிக்கப்பட முடியாத பெருந்துயர நாள் மூன்றாண்டுகளுக்கு முன்னர், இதே தினத்தில்தான் - ஸ்ரீலங்கா முழுவதும் தமிழ் மக்கள் விரட்டி வேட்டையாடப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், வெலிக்கடை வெஞ்சிறையில், பூட்டப்பட்ட இரும்புக் கதவுகளின் கம்பிகளுக்குப் பின்னால் நிராயுதபாணிகளாக நிறுத்தப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளை பௌத்த-சிங்கள பயங்கரவாத அரசின் வெறிக்கும்பல், நாகரீக உலகமே அதிர்ச்சியடையும் வகையில் படுபயங்கரமாகத் தாக்கிப் படுகொலை செய்தது!

ஜூனியஸ் றிச்சேட் ஜெயவர்த்தன அரசினால் நன்கு திட்டமிடப்பட்டு நடாத்தி முடிக்கப்பட்ட காட்டுமிராண்டித்தனமான இப்படுகொலைகளில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் எழுவர் உட்பட மொத்தம் 35 தமிழ் இளைஞர்கள், தலைகள் பிளக்கப்பட்டும் கண்கள் தோண்டி எடுக்கப்பட்டும் உடல்கள் கிழித்தெறியப்பட்டும் இரத்தம் குடிக்கப்பட்டும் தம் இன்னுயிர்களை ஈழ விடுதலைக்காக அர்ப்பணித்தனர். தொடர்ந்து 27-ந் தேதி மேலும் 18 தமிழ்க் கைதிகள் இதேபோல் கொன்று குவிக்கப்பட்டனர்.

இப்பயங்கரப் படுகொலைகளின் மூலம், பஞ்சசீலம் பேசும் பௌத்த-சிங்களப் பாசிச அரசு தன் சுயரூபத்தைக் கூச்சமெதுவுமின்றி நிர்வாணமாக உலகிற்கு காட்டி நின்றது!

தமிழ் இளைஞர்களின் கசாப்புக் கடையாக மாற்றப்பட்ட வெலிக்கடைச் சிறையில்,

**தமிழீழ தேசபிதா தங்கத்துரை,**
**தளபதி குட்டிமணி,**
**மற்றும் முன்னணிப் போராளிகள்**
**ஜெகன் - தேவன் - நடேசுதாசன்**
**சிவபாதம், குமார்** ஆகியோரை

தமிழீழ விடுதலை இயக்கம், தேச விடுதலைத் தீயில் தன் கன்னிக் காணிக்கையாக அன்று அர்ப்பணித்தது.

நிராயுதபாணிகளான நிலையிலும், வெறிபிடித்து தம்மைத் தாக்கிய சிங்களக் காட்டுமிராண்டிக் காடையர் கும்பலை கடைசிவரை எதிர்த்து நின்று மறத்தமிழரின் மான வரலாற்றை தம் குருதி வெள்ளத்தால் தீட்டி மறைந்த இந்த மாவீரர்களுக்கும் அவர்களுடன் பலியான ஏனைய தமிழ் இளைஞர்களுக்கும் மீண்டும் இந்நாளில் தமிழீழ விடுதலை இயக்கம் சிரம்தாழ்த்தி அஞ்சலி செலுத்துகின்றது.

எங்கள் ரத்த நாளங்களில்-நாடிகளில் ஓடிக்கொண்டிருக்கும் குருதியின் மீது - அதில் கலந்திருக்கும் ஜீவ அணுக்களின் மீது ஆணையிட்டு - அறுதியிட்டு உறுதியுடன் கூறுகின்றோம்;

**மரணத்தை வென்ற மாவீரர்களே.**
**உங்கள் இலட்சியக்கனவுகளை நாம் நனவாக்குவோம்!!**

எமது மக்களுக்காக-எங்கள் தங்கத் தமிழீழத் தாயகத்திற்காக, அந்நிய ஆதிபத்திய மண்ணில் நீங்கள் துடிதுடித்துச் சிந்திய ஒவ்வொரு துளி ரத்தத்திற்கும் ஈடாக தமிழீழம் மலரும் வரை போராடுவோம்!!

எங்கள் தாயகத்தைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்கினை நாம் தகர்த்தெறிவோம்! துண்டு துண்டாக - துகள்துகளாக - தூள்தூளாக அதனை உடைத்து நொருக்குவோம்!!

அன்று எங்கள் ஸ்தாபகத்தலைவர் தங்கத்துரையை, தளபதி குட்டிமணியை, ஏனைய முன்னணிச் செயல் மறவர்களை பறி கொடுத்த நிலையிலும் எமது இயக்கம் தளர்ந்துவிடவில்லை-துவண்டு விடவில்லை!

இலட்சியப் பாதையில் எழுச்சியுடன் இயக்கம் வீறுநடை போட்ட வீர வரலாற்றை நீங்கள் அறிவீர்கள்!

சாவகச்சேரி போலீஸ் நிலையத் தாக்குதலில் ஆரம்பித்து, முறிகண்டி யாழ்தேவித் தாக்குதலில் வேகம் பெற்றுத் தொடர்ந்து நிதானமாக ராணுவச் சாதனைகளைச் சூட்டி வந்த எமது இயக்கம், கடைசியாக சிங்களக் கடற்படை விசைப்படகினை கண்ணி வெடி மூலம் நிர்மூலமாக்கியது வரையில், தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தொலை நோக்குடன் தன் பங்களிப்பைச் செய்து வந்து, பாரிய தாக்குதல் ஒன்றுக்கான முஸ்தீபுகளில் முனைந்து நின்ற வேளையில்தான், மூவேந்தர் காலம் முதல் மூத்த தமிழ்க் குடியின் சாபக்கேடாகத் தொடர்ந்து வரும் "ஒற்றுமையினம்" என்னும் உட்பகைவனின் எதிர்பாராத தாக்குதலுக்கு இலக்கானது.

மாவீரர், நேதாஜி சுபாஷ் போல, களத்திலே துணிந்து நின்ற கடமை வீரன், எங்கள் தலைவன் ஸ்ரீ சபாரத்தினத்தையும் 130க்கு மேற்பட்ட இயக்கப் போராளிகளையும் நாம் பலி கொடுத்தோம்!

மூவேந்தர் காலத்திற்குப்பின், தமிழர்களைத் தமிழர்களே மிகப்பெரிய அளவில் தாக்கிக் கொன்ற முதற் சம்பவம் இதுதான்

இருந்தும் எமது இயக்கம் அழிந்து விடவில்லை — ஒழிந்து விடவில்லை,

அன்று சிங்கள ஜெயவர்த்தன அரசின் சதிமதிக்கு எமது தலைவர்கள் வெலிக்கடை சிறையில் பலியான பின்னரும் கூட, எவ்விதம் எமது இயக்கம் இலட்சிய பாதையில் புரட்சி வரலாறு படைத்ததோ அதே போல இன்றும், எம்மவர்களாலேயே எங்கள் தலைவனும், போராளிகளும் இன உணர்வும் இரக்க உணர்வுமின்றி கொலை செய்யப்பட்டுவிட்ட இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும், இலட்சியப் பாதையில் எமது பயணத்தைத் தொடர்வதில் நாம் உறுதி பூண்டிருக்கிறோம்.

கடந்த காலங்களில் எமது இயக்கம் சில தவறுகளை இழைத்திருக்கலாம், இயக்கத்தைச் சார்ந்த சிலர் தவறிழைத்திருந்தாலும், இயக்கமே அவற்றிற்கான பொறுப்பை ஏற்றாக வேண்டும், அதே நேரத்தில் இது தொடர்பாக எம்மீது குற்றச்சாட்டுக்களை நொடுப்பவர்கள், அப்படி ஒன்றும் தவறு செய்யாத மகாத்மாக்களோ அன்றேல் உத்தம புத்திரர்களோ அல்ல என்பதை அனுபவ பூர்வமாக நீங்கள் நன்கறிவீர்கள். இதே வேளை, யார் யாரோ செய்த தவறுகளுக்குக்கூட, எம்மீது பழி சுமத்தப்படுத்துவது, இன்றைய சூழ்நிலையில் ஒன்றும் அதிசயமானதல்ல!

எமது தவறுகளை சுட்டிக்காட்டவும், தட்டிக்கேட்கவும், தீர்ப்பு வழங்கவும் தமிழ் மக்களாகிய உங்களுக்கு - உங்களுக்கு மாத்திரமே-உரிமை உண்டு.

**எதிர்காலத்தில் இத்தகைய தவறுகள் எதுவும் இடம்பெறமாட்டாது - இடம் பெற அனுமதிக்கப்படமாட்டாது என இதயசுத்தியுடன் இயக்கம் உங்களுக்கு உறுதியளிக்கின்றது.**

எமது இனத்தின் சுதந்திரத்திற்கும் - கௌரவத்திற்கும் பாதுகாப்புக்குமாகவே நாம் ஆயுதம் ஏந்துகிறோம். இவற்றுக்காகவே-இந்த நோக்கங்களுக்காகவே எமது ஆயுதங்களை எதிர்காலத்திலும் தொடர்ந்து பிரயோகிப்போம்!

இதில் எவருக்கும் எந்தவொரு சந்தேகமும் வேண்டியதில்லை!

ஏற்றுக்கொண்ட இலட்சியத்தை மறந்து, இடை நடுவில் பாதை மாறிட, பழி தீர்க்கும் உணர்வுக்கு அடிமையாகி பயணத்தைக் கைவிட நாம் தயாராக இல்லை.

இதைப் பலவீனத்தின் அறிகுறி என எவரும் தவறாக எடை போட்டுவிடக் கூடாது!

தினமும் எமது மக்கள்-பெண்கள், சிறுவர்கள், பச்சிளம் பாலர்கள் உட்பட-கோரமாக கொல்லப்பட்டுக் கொண்டிருக்கையில் எமது துப்பாக்கிகள் எமது எதிரிக்கு எதிராகவே இயங்கவேண்டும்! இல்லையேல் எமது மக்களுக்கு நாம் துரோகம் செய்தவர்களாவோம்

'ஒன்றுபட்டால் மட்டுமே—உண்டு வாழ்வு' என்பதில் எமது இயக்கம் அசைக்க முடியாத, அமோக நம்பிக்கை வைத்திருக்கின்றது.

இதத் தத்துவத்தில் இதய சுத்தியுடன் நம்பிக்கை வைத்தே மறைந்த எங்கள் தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி, ஸ்ரீ சபாரத்தினம் ஆகியோர் தம் இறுதி வரையில் செயற்பட்டனர்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்